குடியிருப்பவர்களுக்கு, தடையின்மைச் சான்று பெறப்பட்ட பின்னர்தான் மின் இணைப்பு கொடுக்கப்படுகின்றது என்றும், அந்தச் சான்றிதழ் வாங்குவதற்குக் காலதாமதம் ஆகின்றது என்றும் சொன்னார்கள். அதாவது, 30 ஆண்டுகளுக்கு மேல் கோயில் நிலங்களில் குடியிருந்து வருபவர்களை வரன்முறை செய்ய வேண்டும் என்பது விதி. அதன் அடிப்படையில், அறநிலையத் துறைக்குச் சொந்தமான திருக்கோயில் நிலங்களில் குடியிருந்து வருபவர்களை வரன்முறை செய்து, அவர்களுக்கு உடனடியாக உரிய சான்றிதழ் வழங்கப்படுகின்றது. அதோடுமட்டுமல்லாமல், மின் இணைப்பு என்று வரும்போது, அந்தந்தப் பகுதிகளில் உள்ள அறநிலையத் துறை அதிகாரிகள், தங்கள் திருக்கோயிலின் கட்டுப்பாட்டிலுள்ள குடியிருப்புகளுக்கு, உடனடியாக NOC கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்குவற்குரிய நடவடிக்கையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

சிற்றுந்து

***48067—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புறநகர் மற்றும் கிராமப் பகுதிகளில் புதிய வழித்தடங்களில் சிற்றுந்துகள் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 ஜனவரி 21]

இப்போது புறநகர்ப் பகுதிகளிலும், கிராமப்புறப் பகுதிகளிலும் சிற்றுந்துகள் இயக்குகின்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, தற்போது சென்னையில் சிற்றுந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொதுவாக, கிராமப்புறப் பகுதிகளில் சிற்றுந்தின் தேவைகள் அதிகரித்திருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கிராமங்களிலே உழைக்கும் மக்கள், தொழிலாளர்கள் கிராமத்தின் உள்பகுதிகளில்தான் வசித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஒரு பேருந்தைப் பிடிக்க வேண்டுமென்று சொன்னால், 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பிரதான சாலைக்கு வந்துதான் பேருந்துகளைப் பிடிக்க வேண்டியிருக்கின்றது. எனவே, அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் உதவக்கூடிய வகையிலே, ஏழையெளிய மக்களுக்கு உதவக்கூடிய வகையிலே, தமிழகம் முழுவதும் குக்கிராமங்களை இணைக்கக்கூடிய வகையிலே, சிற்றுந்து வசதிகளை அவசியம் அரசு ஏற்படுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசுடன் ஒப்பிடுகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த நான்கே முக்கால் ஆண்டுகளில் கிட்டத்தட்ட 1,629 புதிய வழித்தடங்களை இயக்கியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே இருந்த 2,124 வழித்தடங்களை நீட்டிப்பு செய்து, 6,262 வழித்தடங்களாக நடைகள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. 1,000 பேர் உள்ள கிராமங்களில் எங்கெங்கு பஸ் வசதி இல்லையோ, அங்கெல்லாம்

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பேருந்து வசதியை செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் என்று எங்கேயும் பஸ் வசதி இல்லாமல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மலைக் கிராமங்கள், குக்கிராமங்களான பீஞ்சமந்தை, பாலாம்பட்டு, ஜார்தான்கொல்லை போன்ற பகுதிகளில் பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் பல்வேறு கிராமங்களுக்கும் மிகச் சிறப்பான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தவகையில், அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மக்கள் பயன்பெறும்வகையில் மலைக் கிராமங்களுக்கு, குருமலை போன்ற பகுதிகளுக்கு சிற்றுந்து வசதிகள் ஏற்பாடு செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற மலைப்பிரதேசங்களுக்கென்று ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 533 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில் உள்ள வழித்தடங்களில் ஏதாவது ரோடு வசதி சரியில்லாமல் இருக்குமென்று நினைக்கின்றேன். அப்படியிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், மாண்புமிகு அம்மா

2016 ஜனவரி 21]

அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.*

டாக்டர் ச. துரையப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல், கொடை வள்ளல், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி, பொன்னியின் தலைவி மக்கள் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.*

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி தாலுகா, பந்தப்புளி என்ற கிராமத்திற்குப் பேருந்து வசதி இல்லை. ஆகையால், பள்ளி செல்லும் மாணவ-மாணவியர்கள், வயதானவர்கள், மருத்துவமனைக்குச் செல்பவர்கள், குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எங்கெல்லாம் பேருந்து வசதிகள் தேவையோ, அங்கெல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், பள்ளி நேரத்திலே பேருந்துகள் இல்லையென்ற கோரிக்கையைச் சொல்லியிருக்கின்றார். பள்ளி நேரத்திலேதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதிக பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையைக் குறிப்பிட்டுச் சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாகப் பரிசீலிக்கப்படும்*

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்

***47473—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, தக்கலையிலுள்ள பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதி, தக்கலையிலிருக்கும் பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு எதுவும் பெறப்படவில்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*